# முன்னுரை

தமிழ்மொழி நீண்ட நெடிய வரலாற்றினை உடையது. ஆன்றவிந்த சான்றோர் பெருமக்கள் ஆக்கி அருளிய இலக்கிய இலக்கணப் பனுவல்களை மிகுதியாகப் பெற்றுத்திகழ்வது. இறையனார் களவியல்உரை, பாண்டிய மன்னர்கள் உருவாக்கிய மூன்று சங்கங்களை விளக்குகிறது. அச்சங்கங்கள் இயங்கிய காலப்பரப்பு நீண்டு நெடியதாகவும் திகழ்ந்தது. அவ்வுரையில் சுட்டப்படும் தமிழ் இலக்கண இலக்கியங்கள் பல இன்று கிடைக்கப் பெறவில்லை. அவ்வாறே யாப்பருங்கலத்திற்கு எழுந்த விருத்தியுரையில் பல இலக்கண நூல்களும் இலக்கியங்கள் பலவும் சுட்டப்படுகின்றன. ஏறத்தாழ ஆயிரத்துநாற்பது மேற்கோள்களை விருத்தியுரையாசிரியர் தம் உரையில் காட்டுகிறார். இவ்வாறு இன்று வழக்கில் உள்ளதும் வாழ்வதுமான இலக்கண நூல்களும், இலக்கிய நூல்களும் அவற்றிற்கு எழுந்த பழைய உரைகளும் காட்டும் தமிழ் இலக்கண இலக்கிய வளம் மிகப்பெரியது என்றாலும் இன்று அப்பனுவல்களை நாம் பெறவில்லை. உரைகளில் காட்டப்பட்டுள்ள மேற்கோள் பகுதிகள் மட்டுமே அப்பழைய நூல்களின் எச்சமிச்சமாகக் கிடைக்கின்றன. இன்று வழங்கிவரும் தமிழ்நூல்களுள் காலத்தால் மூத்ததான தொல்காப்பியம் அது எழுவதற்கு முன்னர் வழக்கில் பல இலக்கண நூல்கள் இருந்தன என்பதைக் காட்டுகிறது. தொல்காப்பியர் கையாண்டுள்ள என்ப, என்மனார், என்றிசினோர், என்ப புலவர் முதலான சொல்லாட்சிகள் தொல்காப்பியத்திற்கு முன்பே பல இலக்கண நூல்கள் இருந்துள்ளன என்பதைச் சுட்டுகின்றன. ஆயினும் இன்று நமக்குக் கிடைத்துள்ள காலப்பழமையான நூல் தொல்காப்பியமே.

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டு முறையே எழுத்து, சொல், பொருள் ஆகிய மொழியின் கூறுகளை விளக்கும் இலக்கண நூலாகத் திகழ்கிறது. தொல்காப்பிய அதிகாரங்களை நோக்கும்போது, தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று கூறுகளை உடையது எனக் கருத இடமுண்டு என்றாலும், தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள உவமையியல்

அணியிலக்கணத்தையும், செய்யுளியல் யாப்பு இலக்கணத்தையும் விளக்கும் இயல்களாகத் திகழ்கின்றமையால் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ் இலக்கணம் ஐந்து பகுப்புகளை உடையதாகத் திகழ்ந்தது என்பதை அறியமுடிகிறது. என்றாலும் வீரசோழியத்தின் காலம் வரை தமிழிலக்கணம் ஐந்து பிரிவுகளை உடையது என்ற கோட்பாடு நிலைபெறவில்லை. வீரசோழியத்திற்குப்பின் பொருளிலக்கணம் அகம் புறம் என்னும் இருவேறு பிரிவுகளாகக் கிளைத்தது. அக இலக்கண நூல்களும் புற இலக்கண நூல்களும், இலக்கிய வகைகளின் இலக்கணத்தை வரையறைச் செய்து உரைக்கும் பாட்டியல் நூல்களும் மிகப்பலவாக எழுந்தன. தண்டியலங்காரம், மாறனலங்காரம், சந்திராலோகம், குவலயானந்தம் ஆகியன குறிப்பிடத்தகுந்த அணியிலக்கண நூல்களாகும். யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, மாறன்பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை ஆகியன குறிப்பிடத்தகுந்த யாப்பிலக்கண நூல்கள் ஆகும். பன்னிருபாட்டியல், நவநீதப்பாட்டியல், வெண்பாப்பாட்டியல் முதலியன பாட்டியல் நூல்களுள் தனிச்சிறப்பு உடையவை. இவ்வாறு தமிழ் இலக்கண நூல்பரப்பு வளர்ந்துள்ளது.

தமிழ் இலக்கணம் மேற்காட்டியவாறு பல பிரிவுகளாகக் கிளைத்து வளர்ந்தது. தொல்காப்பியத்திற்குப்பின் தோன்றிய இலக்கண நூல்கள் பலவும் மேற்சுட்டிய எழுத்து முதலான பிரிவுகள் அனைத்தையும் விளக்கும் வகையிலோ, அல்லது ஒவ்வொரு வகையினை மட்டும் விளக்கும் வகையிலோ இயற்றப் பெற்றுள்ளன. மொழியிலக்கணம் பொதுவாக எழுத்து, சொல் இலக்கணப் பகுதிகளை மட்டுமே சுட்டும். பொருள் முதலான பகுதிகள் எல்லாம் சிறப்புப் பகுதிகளே. இச்சிறப்புப் பகுதிகளை ஆய்வது இலக்கிய நுட்பத்தைக் கண்டறிவதாக அமையும். ஆனால், எழுத்து, சொல் ஆகிய இவ்விருபகுதிகளை ஆய்வது மொழியின் அமைப்பையும், வளர்ச்சியையும் கண்டறிவதாக அமையும். இவ்வாய்வானது எழுத்து, சொல்லிலக்கணக் கோட்பாடுகளின் வளர்ச்சிநிலையை ஆய்வதாக அமைந்துள்ளது.

## ஆய்வின் நோக்கம்

தொல்காப்பியருக்குப் பின் எழுத்தையும், சொல்லையும் விளக்கும் வகையில் எழுந்த அனைத்து இலக்கண நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு, தமிழ் மொழியின் எழுத்து, சொல் இலக்கணக் கோட்பாடுகளை வரலாற்று நோக்கில் வரையறை செய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.

## ஆய்வின் எல்லை

முன்னரே கூறியவாறு தொல்காப்பியர், எழுத்து, சொல் இலக்கணங்களை விளக்கியுள்ளார். தொல்காப்பியத்திற்குப்பின் எழுந்து இன்று வழங்கிவரும் வீரசோழியம், தமிழின் ஐந்திலக்கணப் பகுதிகளையும் விளக்கும் நூலாகத் திகழ்கிறது. ஆனால், அந்நூல் தமிழ் இலக்கணத்தை வடமொழி இலக்கணப் பார்வையில் விளக்கிச்செல்லும் போக்கு உடையது. வீரசோழியத்திற்குப்பின் எழுந்து இன்றும் வழங்கிவரும் நன்னூல், தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு தாம் எழுந்த காலத்தின் மொழி வளர்ச்சியையும் விளக்கிச் செல்கிறது. நன்னூலுக்குப் பின் தோன்றிய முத்துவீரியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம், தொன்னூல்விளக்கம் முதலிய இலக்கண நூல்கள் தொல்காப்பியத்தையும் நன்னூலையும் தழுவிச் செல்பவையேயாயினும் காலமாற்றத்தால் நிகழ்ந்த மொழியியல் மாற்றங்களையும் ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றன. ஆகவே தமிழ்மொழி இலக்கணத்தினை வரலாற்று நோக்கில் ஆராய்கின்ற இவ்வாய்வு தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், முத்துவீரியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம், தொன்னூல்விளக்கம் முதலிய நூல்களின் எழுத்து மற்றும் சொல்லிலக்கணப் பகுதிகளை எல்லையாகக் கொண்டுள்ளது. மூலநூல்களைப் போன்றே அவற்றிற்கு வரையப்பட்ட உரைகளும் வரலாற்று நோக்கில் பல புதிய செய்திகளைக் கூறுவதால் அவ்வுரைகளும் இவ்வாய்வின் எல்லையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

## ஆய்வின் மூலங்கள்

எழுத்து, சொல்லிலக்கணக் கோட்பாடுகள் வரலாற்று நோக்கு என்னும் தலைப்பிலமைக்கப்பட்ட இவ்வாய்வின் மூலங்கள், முதன்மை

ஆதாரங்கள் என்றும், துணைமை ஆதாரங்கள் என்றும் இருவகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

## முதன்மை ஆதாரங்கள்

தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், முத்துவீரியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம், தொன்னூல்விளக்கம் ஆகிய பழந்தமிழ் மரபிலக்கண நூல்களின் எழுத்து, சொல் இலக்கணத்தைக் கூறும் பகுதிகள் இவ்வாய்வின் முதன்மை ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

## துணைமை ஆதாரங்கள்

தமிழ்மொழியின் எழுத்து சொல்லிலக்கணத் தொடர்பான ஆய்வு நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள் முதலானவைகள் எல்லாம் இவ்வாய்வின் துணைமை ஆதாரங்களாக அமைக்கப்பட்டுள்ளன. தற்கால மொழியியலார் கோட்பாடும் இவ்வாய்வில் காட்டப்படுவதால் மொழியியல் நூல்களும் துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

## ஆய்வின் பயன்

தமிழ் மொழியின் மரபிலக்கணத்தை ஆராய்ச்சி செய்வதற்கும், தமிழ் இலக்கண நூல்களை விரிவாக ஆராய்வதற்கும், தற்காலத்தில் தமிழ் மொழியில் ஏற்பட்டுள்ள இலக்கண மாற்றங்களை ஆராய்ச்சி செய்வதற்கும் இவ்வாய்வு பெரிதும் பயனள்ளதாக அமையும்.

## ஆய்வு அணுகுமுறை

காலந்தோறும் எழுந்த பல்வேறு இலக்கண நூல்களை ஒப்பிட்டுச் செல்வதால் ஒப்பிட்டுமுறையிலும், வரலாற்றுமுறையிலும் இவ்வாய்வேடு அணுகப்பட்டுள்ளது.

## ஆய்வேட்டின் அமைப்பு

தமிழ் எழுத்து - சொல்லிலக்கணக் கோட்பாடுகள் வரலாற்று நோக்கு என்னும் இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவ்வியல்கள் பற்றிய விவரம் வருமாறு

***இயல் 1. தமிழ் இலக்கணத் தோற்றமும் வளர்ச்சியும்***
***இயல் 2. எழுத்திலக்கணக் கோட்பாடுகள்***
***இயல் 3. சொல்லிலக்கணக் கோட்பாடுகள்***

இவ்வியல்களின் நுவல்பொருள் விவரம் நிரலே தரப்பட்டுள்ளது.

**இயல் - 1**

**தமிழ் இலக்கணத் தோற்றமும் வளர்ச்சியும்**

இவ்வாய்வேட்டின் முதல் இயலாக அமைக்கப்பட்டுள்ள இவ்வியலில் தமிழ் இலக்கண வளர்ச்சி முறையாக விளக்கப்பட்டுள்ளது. இன்று வழக்கில் உள்ள இலக்கண நூல்களே யன்றி முன்பு வழங்கி இன்று வழக்கிறந்த இலக்கண நூல்களின் வரலாறும் முறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூலின் நூற்பெயர், காரணம், நூலாசிரியர் வரலாறு, நூல் அமைப்பு, நூல் எழுந்த காலமும், சூழலும், நூலின் உரை, நூல்பதிப்பு விவரம் முதலான செய்திகளும் நிரல்படுத்தப்பட்டுள்ளன. காலந்தோறும் மாறிவரும் எழுத்தியல் சொல்லியல் கோட்பாடுகளை ஆய்கின்ற இவ்வாய்விற்கு அவ்விலக்கணங்களைக் கூறும் நூல்களின் வரலாறு இன்றியமையாததால் இவ்வியல் அவ்வரலாற்றை ஆராய்வதாக அமைக்கப்பட்டுள்ளது.

**இயல் - 2**

**எழுத்திலக்கணக் கோட்பாடுகள்**

இவ்வாய்வேட்டின் இரண்டாவதாக அமைக்கப்பட்டுள்ள இவ்வியலில் எழுத்திலக்கணத்தின் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல், ஈறு, இடை, போலி, பதம், புணர்ச்சி என்னும் பன்னிரண்டு உறுப்புகள் குறித்த செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் அமைந்துள்ள மேல்குறித்த எழுத்திலக்கணக் கூறுகளை ஆய்ந்து இலக்கணநூலோர் கண்டறிந்த மரபுகள் நிரல்படுத்தப்பட்டுள்ளன. காலந்தோறும் எழுந்துள்ள இலக்கண நூல்களில் காணலாகும் மேற்குறித்த உறுப்புகள் பற்றிய கருத்துகள், முரண்கள் ஆகியன எடுத்துக்காட்டப்பட்டு எழுத்திலக்கணக் கோட்பாடு வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் தற்கால மொழியியலார்

இவ்வுறுப்புகள் குறித்துக் கண்டுரைத்துள்ள முடிபுகள் மரபிலக்கணத்தோடு ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.

## இயல் - 3

## சொல்லிலக்கணக் கோட்பாடுகள்

இவ்வியலின்கண் தமிழ் மொழியின் சொல்லிலக்கணக் கோட்பாடுகள் இலக்கண நூலாசிரியர்களின் கருத்தியலின்படி நிரல்படுத்தப்பட்டுள்ளன. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்னும் தமிழின் நான்குவகை சொற்பிரிவுகளுக்கான இலக்கணக் கூறுகள் ஆயப்பெற்றுக் காலந்தோறும் மரபிலக்கணத்தில் இப்பிரிவுகள் குறித்த மாற்றங்களும் முரண்களும் எடுத்துக்காட்டப்பட்டு முடிபுகள் கண்டுரைக்கப்பட்டுள்ளன. தற்கால மொழியியல் அறிஞர்கள் சொல்லிலக்கணம் குறித்துக் கூறியுள்ள கருத்துகள் எடுத்துக்காட்டப்பட்டு ஒப்பீட்டு முறையில் முடிபுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வியலினுள் தமிழ் மொழியின் சொல் இலக்கணத்தில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் நிரல்படுத்திக் கூறப்பட்டுள்ளன.

## முடிவுரை

ஆய்வேட்டின் இறுதிப்பகுதியாக முடிவுரை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழிப் பெறப்பட்டுள்ள முடிவுகள் இப்பகுதியில் தொகுத்துரைக்கப் பட்டுள்ளன.

## துணைநூற்பட்டியல்

இவ்வாய்வுக்குப் பயன்பட்ட முதன்மை ஆதார நூல்களின் விவரமும், துணைமை ஆதார நூல்களின் விவரமும் நிரல்படுத்தப்பட்டுள்ளன.

## பின்னிணைப்புகள்

இவ்வாய்வுக்குத் தொடர்பான அட்டவணைகள் பின்னிணைப்புகளாகத் தரப்பட்டுள்ளன.